

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 ஆகஸ்டு 08, 2019 புரட்சி 18 முழக்கம் 30 விலை: ரூ.3.00


**மண்ணின் மைந்தர்களின் வேலை வாய்ப்புரிமையைப்பறிக்காதே!**
**புதிய கல்வி என்ற பெயரால் குலக்கல்வியைத் திணிக்காதே!**

# கழகத்தின் 6 நாள் பரப்புரைப் பயணம்: 6 முனைகளிலிருந்து புறப்படுகிறது

*‘மண்ணின் மைந்தர்களின் வேலை வாய்ப்புரிமையைப் பறிக்காதே; புதிய கல்வி என்ற பெயரால் குலக் கல்வியைத் திணிக்காதே’ என்ற முழக்கத்துடன் திராவிடர் விடுதலைக் கழகம், தமிழகத்தில் முனைகளிலிருந்து பரப்புரைப் பயணத்தைத் தொடங்குகிறது. ஆகஸ்டு 26இல் தொடங்கி நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் ஆகஸ்ட் 30ஆம் தேதி பயண நிறைவு விழா நடைபெறுகிறது.*

திருப்பூர், விழுப்புரம், ஈரோடு (கோபி), மயிலாடுதுறை, சென்னை, மேட்டூர் என 6 முனைகளிலிருந்து தொடங்கும் பயணம், 150 ஊர்களில் பரப்புரையை நடத்துகிறது. நூறுக்கும் மேற்பட்ட கழக செயல்பாட்டாளர்கள், பயணங்களில் முழு அளவில் பங்கேற்கிறார்கள். பரப்புரைக்கான துண்டறிக்கை, கழக வெளியீடுகள் தயாராகி வருகின்றன. கலைக் குழுக்கள், பரப்புரைப் பயணங்களில் இசை, வீதி நாடகம் வழியாக மண்ணின் மைந்தர்கள் வேலை வாய்ப்புகளில் புறக்கணிக்கப்படுவது குறித்தும் வடநாட்டுக்காரர்கள் தமிழக வேலை வாய்ப்புகளில் குவிந்துவரும் ஆபத்துகள் குறித்தும் மக்களிடையே பரப்புரை செய்வார்கள். ஒத்த கருத்துடைய அமைப்புகள், இயக்கங்கள், கட்சிகள் பயணத்துக்கு ஆதரவு தர ஆர்வத்துடன் முன் வந்திருக்கிறார்கள். ‘காலத்துக்குத் தேவையான கண்டிப்பாக நடத்த வேண்டிய பரப்புரை’ என்று பல்வேறு இயக்கத் தோழர்களும் தங்கள் ஆதரவினை வெளிப்படுத்தி வருகிறார்கள். கடந்த 7 ஆண்டுகளாக திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து பரப்புரை இயக்கங்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. பயணக் குழுவினரின் பயணத் திட்ட விவரம்:

**திருப்பூர் குழு :** 26.08.2019 திங்கள் - காலை 10 மணி: உடுமலை; பிற்பகல் 4 மணி : தேவனூர் புதூர்; மாலை 6 மணி : வேட்டைக்காரன் புதூர்- பொதுக் கூட்டம்.

27.08.2019 செவ்வாய் - காலை 10 மணி : ஆனை மலை, முக்கோணம்; பகல் 12 மணி : கா.க புதூர்; பிற்பகல் 4 மணி : பொள்ளாச்சி; மாலை 6 மணி : கிணத்துக்கடவு; மாலை 7 மணி : உக்கடம்.

28.08.2019 புதன் - காலை 9 மணி : சூலூர்; காலை 10 மணி : சோமனூர்; பகல் 12 மணி : பல்லடம்; மாலை 4 மணி : பொங்கலூர்; மாலை 5 மணி : கணபதி பாளையம்; மாலை 6 மணி : வீரபாண்டி பிரிவு.

29.08.2019 வியாழன் - காலை 10 மணி : படியூர்; காலை 11 மணி : காங்கேயம்; பிற்பகல் 4 மணி : நத்தக் காடையூர்; மாலை 6 மணி : வெள்ளகோயில்; 30.08.2019 வெள்ளி - காலை 10 மணி : முத்தூர்; பகல் 12 மணி : பூந்துறை; மாலை 4 மணி : பள்ளிபாளையம் (நிறைவு)

**விழுப்புரம் குழு :** 25.08.2019 ஞாயிறு காலை 10 மணி - மஞ்சகுப்பம்- கடலூர்; பகல் 12 மணி - செம் மண்டலம்; பிற்பகல் 3 மணி - தூக்கணாம்பாக்கம்; மாலை 5 மணி - பாக்கம் கூட்ரோடு(தங்கல்)

26.08.2019 திங்கள் - காலை 10 மணி - வளவனூர் - விழுப்புரம்; பகல் 12 மணி - விழுப்புரம்; பிற்பகல் 3 மணி - அரசூர்; மாலை 5 மணி - திருவெண்ணெய் நல்லூர்( தங்கல்)

27.08.2019 செவ்வாய் - காலை 10 மணி - திருக்கோவிலூர்; பகல் 12 மணி - மணலூர்பேட்டை; பிற்பகல் 3 மணி - மூங்கில்துறைப்பட்டு; மாலை 5 மணி - கடுவனூர் (தங்கல்)

28.08.2019 புதன் - காலை 10 மணி - பகண்டை கூட்ரோடு; பகல் 12 மணி - சங்கராபுரம்; பிற்பகல் 3 மணி - மூரான்பாளையம்; மாலை 5 மணி - கள்ளக்குறிச்சி(தங்கல்)

29.08.2019 வியாழன் - காலை 10 மணி - நயினார்பாளையம்; பகல் 12 மணி - சின்னசேலம்; பிற்பகல் 3 மணி - ஆத்தூர் - சேலம்; மாலை 5 மணி - இராசிபுரம்- நாமக்கல் (தங்கல்)

30.08.2019 வெள்ளி - காலை 10 மணி - குருசாமிபாளையம்; பகல் 12 மணி - திருச்செங்கோடு; பிற்பகல் 3 மணி - பள்ளிபாளையம் (நிறைவு)

**ஈரோடு குழு :** 25.08.2019 ஞாயிறு - காலை 10 மணி - கோபி; பகல் 12 மணி - கொடிவேரி; பிற்பகல் 3 மணி - T.N. பாளையம்; மாலை 6 மணி - சத்திய மங்கலம் (தங்கல்)

26.08.2019 திங்கள் - காலை 10 மணி - பவானிசாகர்; பகல் 12 மணி - புளியம்பட்டி; பிற்பகல் 3 மணி - நம்பியூர்; மாலை 6 மணி - குன்னத்தூர்

27.08.2019 செவ்வாய் - காலை 10 மணி - பெருந்துறை; பகல் 12 மணி - சென்னிமலை; பிற்பகல் 3 மணி - K.G. வலசு; மாலை 6 மணி - அரச்சலூர்

28.08.2019 புதன் - காலை 10 மணி - விளக்கேத்தி; பகல் 12 மணி - சிவகிரி; பிற்பகல் 3 மணி - ஒத்தக்கடை; மாலை 6 மணி - கொடுமுடி

29.08.2019 வியாழன் - காலை 10 மணி - ஊஞ்சலூர்; பகல் 12 மணி - கருமாண்டம்பாளையம்; பிற்பகல் 3 மணி - எழுமாத்தூர்; மாலை 6 மணி - மொடக்குறிச்சி

30.08.2019 வெள்ளி - காலை 10 மணி - சோலார்; பகல் 12 மணி - பெருமாள்மலை; பிற்பகல் 3 மணி - பள்ளிபாளையம்.

**மயிலாடுதுறை குழு :** 26.08.2019 திங்கள் - காலை 10 மணி - கொல்லுமாங்குடி; பகல் 12 மணி - பேரளம்; மாலை 4 மணி - செம்பனார்கோயில்; மாலை 6 மணி - மயிலாடுதுறை (தங்கல்)

27.08.2019 செவ்வாய் - காலை 10 மணி - குத்தாலம்; பகல் 12 மணி - ஆடுதுறை; மாலை 4 மணி - கும்ப கோணம்; மாலை 6 மணி - நாச்சியார்கோயில் (தங்கல்)

28.08.2019 புதன் - காலை 10 மணி - குடவாசல்; பகல் 12 மணி - திருவாரூர்; மாலை 4 மணி - கூத்தா நல்லூர்; மாலை 6 மணி - மன்னார்குடி (தங்கல்)

29.08.2019 வியாழன் - காலை 10 மணி - ஒரத்தநாடு; பகல் 12 மணி - பாப்பாநாடு; மாலை 4 மணி - பட்டுக் கோட்டை; மாலை 6 மணி - பேராவூரணி (தங்கல்)

30.08.2019 வெள்ளி - காலை 10 மணி - வல்லம்; பகல் 12 மணி - திருவரம்பூர்.

**சென்னை குழு :** 25.08.2019 ஞாயிறு - காலை 10 மணி- இராயப்பேட்டை துவக்கம்; பகல் 12 மணி - அனகாபுத்தூர்; மாலை 3 மணி- பல்லாவரம்; மாலை 5 மணி- தாம்பரம்( தங்கல்)

26.08.2019 திங்கள் - காலை 10 மணி- முடிச்சூர்; பகல் 12 மணி - படப்பை; மாலை 3 மணி- வாலாஜாபாத்; மாலை 5 மணி- காஞ்சிபுரம்(தங்கல்)

27.08.2019 செவ்வாய் - காலை 10 மணி - வந்தவாசி; பகல் 12 மணி- சேத்துப்பட்டு; மாலை 3 மணி- திரு வண்ணாமலை; மாலை 5 மணி- தண்டராம்பட்டு (தங்கல்)

28.08.2019 புதன் - காலை 10 மணி- செங்கம்; பகல் 12 மணி- சிங்காரப்பேட்டை; மாலை 3 மணி- ஊத்தங்கரை; மாலை 5 மணி- அரூர் (தங்கல்)

29.08.2019 வியாழன் - காலை 10 மணி- பாப்பி ரெட்டிப்பட்டி; பகல் 12 மணி- சாமியாபுரம் கூட்ரோடு; மாலை 3 மணி- அயோத்தியாபட்டினம்; மாலை 5 மணி- தாதகாப்பட்டி கேட்

30.08.2019 வெள்ளி - காலை 10 மணி- கொண்டாலம்பட்டி; பகல் 12 மணி- சங்ககிரி; மாலை 3 மணி- பள்ளிபாளையம் (நிறைவு)

**மேட்டூர் குழு :** 27.08.2019 செவ்வாய் - காலை 10 மணி- பென்னாகரம்; மதியம் 12 மணி- நாகதாசம்பட்டி; மதியம் 3 மணி- பாப்பாரப்பட்டி; மாலை- 4:30 மணி- பாலக்கோடு; மாலை- 6 மணி- வெள்ளிச்சந்தை, மாரண்ட அள்ளி (தங்கல்)

28.08.2019 புதன் - காலை 10 மணி- தேன்கனிக் கோட்டை; மதியம் 12 மணி - கெலமங்கலம்; மதியம் 3 மணி - சூளகிரி; மாலை 6 மணி- இராயக்கோட்டை: பொதுக்கூட்டம் (தங்கல்)

29.08.2019 வியாழன் - காலை 10 மணி- கிருஷ்ணகிரி; மதியம் 12 மணி- பர்கூர்; மதியம் 3 மணி- காவேரிப்பட்டினம்; மாலை 6 மணி- ஓமலூர்: பொதுக்கூட்டம் (தங்கல்)

30.08.2019 வெள்ளி - காலை 10 மணி- முத்து நாயக்கன்பட்டி; மதியம் 12 மணி- ஜலகண்டாபுரம்; மதியம் 3 மணி- எடப்பாடி; மாலை 5 மணி- பள்ளிபாளையம் (நிறைவு விழா)

## பயணம்: நாமக்கல், சென்னை மாவட்டக் கழகங்கள் ஆலோசனை

மண்ணின் மைந்தர்களின் உரிமை மீட்பு நிறைவு விழா, பள்ளிபாளையத்தில் நடைபெற உள்ளதால், நாமக்கல் மாவட்ட கலந்துரையாடல், பள்ளிபாளையம் பெரியார் நூலகத்தில், மாவட்டத் தலைவர் சாமிநாதன் தலைமை வகிக்க, மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி முன்னிலை வகிக்க காலை 10:30 மணிக்கு தொடங்கியது. நிறைவு விழாவிற்கான நிதியை, கடை வசூல் மூலம் திரட்டுவது எனவும், மாவட்டம் முழுதும் துண்டறிக்கைகளை வழங்குவது, சுவரொட்டிகளை ஒட்டுவது எனவும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. திருச்செங்கோடு, குமாரபாளையம், பள்ளிபாளையம் பகுதிகளிலிருந்து தோழர்கள் கலந்து கொண்டனர்.

திராவிடர் விடுதலைக் கழக சென்னை மாவட்ட கலந்துரையாடல், இராயப்பேட்டை விஜய் திருமண மண்டபத்தில் 04.08.2019 அன்று மாலை 6 மணிக்கு, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

“மண்ணின் மைந்தர்களின் உரிமை மீட்புப் பயண”த்தில் கலந்து கொள்வது, பயணத்திற்கான திட்டங்கள், மாவட்ட கழகத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி விரிவாக தோழர்களால் கலந்துரையாடப்பட்டது.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத்தின் நிலைப்பாடு பற்றியும், தற்போது இந்த பயணத்தின் அவசியம் குறித்தும் தோழர்கள் எதிரிகளிடத்திலும், மக்களிடத்திலும், சமூக வலைதளங்களிலும் பொறுப்புணர்வுடன்(மக்களிடனுடன்) எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை பற்றியும் விரிவாக கருத்துரையாற்றினார். இறுதியாக, மாவட்டத் தலைவர் வேழவேந்தன் நன்றியுரை கூற இரவு 9 மணிக்கு நிகழ்வு முடிவடைந்தது.

# ராஜாதாலே நினைவுக் கூட்டத்தில் விடுதலை இராசேந்திரன் உரை

# சுதந்திர நாளை துக்க நாளாக அறிவித்து, இந்து “புனித” நூல்களுக்கு தீயிட்ட போராளி




அம்பேத்கர் பூலே கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு மகாராஷ்டிரா மாநிலத்தில் ‘தலித் பேந்தர்’ (தலித் சிறுத்தைககள்) என்ற புரட்சிகர இளைஞர் இயக்கத்தைத் தொடங்கியவர்களில் ஒருவரான ராஜாதாலே, கடந்த ஜூலை 16ஆம் தேதி தனது 78ஆவது வயதில் மரணமடைந்தார். அவரது மறைவுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி ஒன்றை தமிழ்நாடு குடியரசு கட்சி, ஜூலை 30, 2019 அன்று சென்னை ‘இக்ஷா’ அரங்கில் நடத்தியது. தமிழ்நாடு குடியரசு கட்சித் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.கு. தமிழரசன், தமிழ்நாடு பகுஜன் சமாஜ் கட்சித்தலைவர் ஆம்ஸ்ட்ராங் உள்ளிட்ட பலரும் உரையாற்றினர். கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

“ராஜாதாலே, பெரியார் திடலில் நடந்த மாநாடு ஒன்றில் பங்கேற்றுப் பேசியது எனக்கு நினைவில் இருக்கிறது. முன்னாள் மத்திய அமைச்சர் தலித் எழில்மலை அவர்கள் ராஜாதாலே மறைந்த அன்று, என்னுடன் தொடர்பு கொண்டு அவரது புரட்சிகர செயல்பாடுகளைப் பகிர்ந்து கொண்டார். அமெரிக்காவில் வாழும் கறுப்பின இளைஞர்கள் வெள்ளை நிறவெறிக்கு எதிராக கருஞ்சிறுத்தைகள் கட்சி ஒன்றைத் தொடங்கி நிறவெறிக்கு எதிராகப் போராடினார்கள். அந்த உணர்வின் உந்துதலால் தான், ஜெவி. பாவார், நாம்தியோதாசல், அருண்காம்ப்ளே ஆகியோருடன் இணைந்து, தலித் சிறுத்தைகள் அமைப்பைத் தொடங்கினார் ராஜாதாலே. தீண்டாமை, ஜாதி ஒடுக்குமுறைக்கு எதிராக தீவிரமாக களமாடிய அந்த அமைப்பு, இந்து மதத்தையும் பார்ப்பனிய மேலாண்மையை உயர்த்திப் பிடித்த ‘இந்து’ புனித நூல்களை தீ வைத்து எரிக்கும் போராட்டங்களையும் நடத்தியது. இதனால் நாடு முழுதும் பேசப்படும் இயக்கமாக தனது அடையாளத்தைப் பதித்தது. 1972ஆம் ஆண்டு இந்தியாவின் 25ஆம் ஆண்டு சுதந்திர நாள் விழா கொண்டாட்டத்தை நாடு கொண்டாடியபோது, அது ‘துக்க நாள்’; தலித் மக்கள் சுதந்திர நாளைக் கொண்டாடக் கூடாது; ஜாதிய ஒடுக்குமுறைகளையும் ஜாதியத்தையும் காப்பாற்றி வரும் இந்தியாவின் ‘சுதந்திர’ நாளையும் அதன் புனிதச் சின்னமாக போற்றப்படும் தேசியக் கொடியையும் தலித் மக்கள் மதிக்கத் தேவையில்லை என்று அறைகூவல் விடுத்து, ‘சாதனா’ பத்திரிகையில் (அக்.9, 1972) அதை கட்டுரையாகவும் எழுதினார். நாடு முழுதும் பலத்த சர்ச்சைகளை உருவாக்கியது அக்கட்டுரை. அதைத் தொடர்ந்து ‘இந்து’ ‘புனித நூலாக’ பேசப்பட்ட கீதை, வேதம், இராமாயணம் போன்றவற்றை தீ வைத்து எரிக்கும் போராட்டத்தை அவர் அறிவித்தார். மகாராஷ்டிர மாநிலத்தில் தலித் மக்களுக்கு எதிரான ஜாதிய ஒடுக்குமுறைகள் வன்முறைகள் தலைவிரித்தாடிய காலத்தில் துவக்கப்பட்டது தான். ‘தலித் சிறுத்தைகள்’. இயக்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான ஜே.வி. பவார், தலித் சிறுத்தைகள் கட்சியின் வரலாற்றை நூலாக எழுதியுள்ளார். அக்கட்சியின் அதிகாரபூர்வ வரலாறாக அந்த நூல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதில் பல தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

ராஜாதாலே சுதந்திர நாளை துக்க நாளாக அறிவித்து எழுதிய கட்டுரை குறித்து பம்பாய் கோரகான் பகுதியில் உள்ள பத்கார் கல்லூரியில் கருத்தரங்கம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் அமைப்பு சார்பில் பேராசிரியர் எஸ்.எஸ். யாதவ் ஏற்பாடு செய்த அக்கருத்தரங்கில் ஜனசங்கம் என்ற இந்துத்துவ கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஜி.பி. கனிஸ்கர், சோஷலிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மிர்ணாள் கோரே, புத்தமத ஆய்வாளர் சரத்மகாத்கர், தலித் எழுத்தாளர் பேராசிரியர் கேசவ் மேஷமை உள்ளிட்ட பல்வேறு சிந்தனையாளர்கள் பங்கேற்றுப் பேசினர். ராஜாதாலேயும் பேசினார். ‘சுதந்திர நாளை துக்க நாள்’ என்ற தனது கருத்தை மறுத்துப் பேசியவர்களுக்கு ராஜாதாலே தந்த பதிலும் நெருப்பாக இருந்தது. எதிர்ப்பவர்கள் துணிவற்றவர்கள் என்று மேடையில் கூறியதோடு, ‘சாகும் வரை தூக்கிலிட வேண்டும்’ என்று எனக்கு நீதிமன்றம் ஆணையிட்டாலும் என்னுடைய கருத்திலிருந்து பின்வாங்க மாட்டேன் என்று முழக்கமிட்டார். வேதங்களையும் இராமாயணத்தையும் கடுமையாக சாடினார். ஆரியரல்லாத புத்த மார்க்க சிந்தனையாளர்களால் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்களைக் களவாடி, ‘பிராமணர்கள்’ தங்கள் மேலாதிக்க கருத்துகளை அதில் புகுத்தி சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டவையே இவர்கள் பேசும் ‘இந்து’ புனித இலக்கியங்கள் என்றார். ராஜாதாலேயின் இந்த ஆவேச ‘இந்து’ மத எதிர்ப்புப் பேச்சு, சிவசேனைத் தலைவர் பால்தாக்கரேவை கோபத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

“இந்து புனித நூல்களை மதிக்காத இந்த புத்த மார்க்க இளைஞர்கள் மீது இரக்கமே காட்டக்கூடாது; அவர்களை மதிக்கவே கூடாது” என்று பால்தாக்கரே அலறினார். இதற்கு ராஜாதாலே பதிலடி தந்தார். “புத்த மார்க்கத்தை ஏற்றுள்ள எங்கள் இளைஞர்களோடு சிவாஜி பூங்காவிலே சிவசேனை நடத்த இருக்கும் பேரணிக்கே சென்று இராமாயணத்தையும், வேதத்தையும், கீதையையும் எரிப்பேன்” என்று பதிலடி தந்தார். கோரிகான் கருத்தரங்கில் பேசிய பல சிந்தனையாளர்கள் தேசியக் கொடியை அவமதிக்கக் கூடாது என்று ராஜாதாலேவிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதே கருத்தரங்கில் பேசிய புத்த மார்க்க சிந்தனையாளர் சரத்மகாத்கர் இதற்கு பதிலடி தந்தார். காந்தியைப் பற்றிய நூல் எழுதிய ஆனந்த்ஹரித்கர், “தேசியக் கொடியில் - அம்பேத்கர் அசோகச் சக்கரத்தைத் திணித்து விட்டார். இது புத்த மதக் குறியீடு. இதற்காகவே தேசியக் கொடியை கிழித்து எறிய வேண்டும்” என்று நூலில் எழுதியிருக்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுத்துவிட்டு, பிறகு தாலே மீது நடவடிக்கை எடுங்கள் என்றார். தலித் மக்கள் மீது நடத்தப்படும் வன்முறைகளுக்கு கருத்தியல்களை வழங்குவது ‘இந்து’ புனித நூல்கள்தான். அவை தீயிட்டுப் பொசுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தியவர் ராஜாதாலே. அதற்காக அவர் பேசும் கூட்டங்களில் எல்லாம் இந்து சனாதனவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். குழப்பம் விளைவித்தனர். அவற்றைப் புறந்தள்ளினார் ராஜாதாலே. தலித் சிறுத்தைகள் அமைப்போடு கருத்து மாறுபாடு ஏற்பட்டு அம்பேத்கர் பெயரில் சமுதாய இயக்கம் ஒன்றைத் தொடங்கினார். சிவசேனைக்காரர்கள், பால்தாக்கரே உத்தரவுப்படி, தாலே பேசிய கூட்டங்களில் கலவரங்களை உருவாக்கினர்.

1972 ஆம் ஆண்டு அக்டோபர் 23ஆம் தேதி பம்பாய் கல்யாண் பகுதியில் ராஜாதாலே, தசால் ஆகியோர் பேசிய கூட்டத்தில் சிவசேனை கட்சியினர் கற்களையும், சோடாபட்டில்களையும் வீசி கூட்டத்தைக் கலைக்க முயற்சித்தனர். கூட்டத்திலிருந்த தலித் இளைஞர்கள் வெகுண்டு எழுந்து பதிலடி தந்தனர். அந்தப் பகுதியே போர்க் களமானது. தலித் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டனர் என்று ‘தலித் சிறுத்தைகள்’ வரலாற்று நூல் பதிவு செய்திருக்கிறது.

மற்றொரு முக்கியத் தகவலையும் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தலித் எழில்மலை அவர்கள் என்னிடம் கூறிய தகவல் இது. மகாராஷ்டிர முதல்வராக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வசந்தராவ் பட்டீல் இருந்த போது அம்பேத்கர் ‘தலித் மக்கள் தண்ணீர் எடுக்கும்’ போராட்டத்தை நடத்திய மகர் குளத்துக்கு 50ஆம் ஆண்டு நினைவு நாளில் மரியாதை செலுத்த வந்தார். அப்போது ராஜாதாலேவும் அவரது அமைப்பினரும் மகாராஷ்டிரா முதல்வர் வீர வணக்கம் செலுத்தக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து, மகர் குளம் அருகே நெருங்கவிடவில்லை. அப்போது ராஜாதாலே, மகாராஷ்டிரா முதல்வருக்கு ஒரு நிபந்தனை விதித்தார். அம்பேத்கர் எழுத்து பேச்சுகளை மகாராஷ்டிரா அரசு தொகுப்பாக வெளியிட சம்மதித்தால் அனுமதிக்கத் தயார் என்றார். மகாராஷ்டிரா முதல்வர் அதே இடத்தில் ஒப்புதல் வழங்கினார். அதற்குப் பிறகுதான் மாநில அரசு தாலேவுக்கு உறுதி அளித்தபடி அம்பேத்கர் கருத்துகளைத் தொகுப்பாக வசந்த் மூன் அவர்களை பதிப்பாசிரியராகக் கொண்டு தொகுத்தது.

ஜாதி தீண்டாமை ஒழிப்புக்கான போராட்டத்தில் இப்படி எதிர்நீச்சல் போட்ட களப் போராளிகளை கலகக் காரர்களை நாம் நினைவுகூர வேண்டும். ஊடகப் பொது வெளியில் இவர்கள் வெளிச்சத்துக்கு வராதவர்கள். மாபெரும் சென்னை மாநகரத்தின் இந்த சிறிய அரங்கில் நாம் கூடி அவர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறோம். உண்மையான போராளிகளுக்கான பெருமைக்குரிய அடையாளம் இப்படித்தான் இருக்கும்” என்றார் விடுதலை இராசேந்திரன்.

## அய்அய்டி படிப்பை பாதியில் விட்ட 2,461 மாணவர்களில் ஒடுக்கப்பட்டவர்கள் 1,171 பேர்

கடந்த 2 ஆண்டுகளில் அய்அய்டி கல்வி நிறுவனங்களிலிருந்து 2461 மாணவர்கள் படிப்பை பாதியில் நிறுத்தியுள்ளனர் என்று மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப கல்விக்கு நாட்டிலேயே முன்னோடி கல்வி நிறுவனமாக இருந்து வருவது அய்அய்டி நிறுவனங்களாகும். இந்தக் கல்வி நிறுவனங்களில் எப்படியாவது பயில வேண்டும் என பல மாணவர்கள் தங்களின் பள்ளி பருவம் முதல் தீவிர முயற்சியில் ஈடுபடுகின்றனர். எனினும் இந்தக் கல்வி நிறுவனங்களிலிருந்து அதிக மாணவர்கள் தங்களின் படிப்பை பாதியில் விடுவது தெரியவந்துள்ளது. இந்தத் தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாநிலங்களவையில் ஆந்திர மாநில நாடாளுமன்ற உறுப்பினரான விஜயசாய் ரெட்டி அய்அய்டியில் மாணவர்கள் இடைநிற்றல் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பதிலளித்திருந்தது. அதில் அய்அய்டியிலிருந்து கடந்த 2017ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 2,461 மாணவர்கள் தங்களின் படிப்பை பாதியில் நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 57% மாணவர்கள் அய்அய்டி-டில்லி மற்றும் அய்அய்டி-கரக்பூர் ஆகிய நிறுவனங்களிலிருந்து பாதியில் படிப்பை நிறுத்தியுள்ளனர்.

அய்அய்டியில் இடைநிற்றல் மாணவர்கள் : டில்லி-782; கரக்பூர்-622; கான்பூர்-190; சென்னை-128; பாட்னா-92; அய்தராபாத்-85; ரூர்கி-57; இந்தோர்-50; புவனேஸ்வர்-39

கடந்த இரண்டு ஆண்டுகளில் அய்அய்டி டில்லியிலிருந்து 782 பேரும், அய்அய்டி கரக்பூரிலிருந்து 622 பேரும் படிப்பை பாதியில் விட்டுள்ளனர். அதேபோல அய்..அய்டி. மெட்ராஸ் (சென்னை) கல்வி நிறுவனத்தில் 128 பேர் பட்டபடிப்பை முடிக்காமல் வெளியேறியுள்ளனர். மேலும் இந்த இரண்டு ஆண்டுகளில் அய்.அய்.டி. நிறுவனங்களிலிருந்து இடை நிற்றல் செய்த மாணவர்களில் 47.5% பேர் பட்டியலின மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. அதாவது இந்தப் பிரிவை சேர்ந்த 1,171 மாணவர்கள் அய்அய்டி நிறுவனங்களிலிருந்து படிப்பை முடிக்காமல் வெளியேறியுள்ளனர்.

அய்அய்டி நிறுவனங்களிலிருந்து அதிகளவில் மாணவர்கள் வெளியேறுவதற்கு மருத்துவ காரணங்கள், வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் வாய்ப்புகள், தவறான படிப்பை தேர்ந்தெடுத்தல் போன்றவற்றை காரணமாக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# காஷ்மீரின் ‘370’ ஆவது பிரிவு உருவான வரலாறு

*ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு தனி அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள 370 ஆவது பிரிவை மோடி ஆட்சி நீக்கி விட்டது. பார்ப்பன பண்டிட்டுகளுக்காக தனிமாநிலம் உருவாக்கி, காஷ்மீரை இரண்டாகப் பிரித்து விட்டது. இந்தப் பின்னணியில் ‘370’ உருவான வரலாற்றை விளக்குகிறது இக்கட்டுரை.*

இந்தியாவில்தான் காஷ்மீர் இருக்கிறது.

ஆனால், அது எப்படி இந்தியாவுக்குள் வந்தது என்பதை இன்றைய பெரும்பான்மையானவர்கள் அறியமாட்டார்கள். இந்தியா சுதந்திரம் பெற்றபோது 526 சமஸ்தானங்கள் இருந்தன. இவற்றில் பெரும் பாலானவை இந்தியாவுடன் இணைந்து விட்டன. இணைய மறுத்த அய்தராபாத் சமஸ்தானத்தை இராணுவ பலத்தால் இணைத்தார் அன்றைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல்.

காஷ்மீர் சமஸ்தானத்தை இந்து மன்னரான ஹரிசிங் ஆட்சி செய்து வந்தார். அங்கே உள்ள மக்களில் பெரும்பான்மையானவர்கள் இஸ்லா மியர்கள். இதனால் காஷ்மீர், இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் இணைவதா என்ற குழப்ப நிலைநீடித்தது.

பாகிஸ்தானுடன் இணைந்தால் தனி சமஸ்தானத் தகுதியுடன் நீடிக்கலாம் என்றும், இந்தியாவுடன் இணைந்தால் ஏற்கெனவே உள்ள மாநிலங்களில் ஒன்றாகி, தனித் தன்மையை இழக்க வேண்டி வரும் என்றும், மன்னர் ஹரிசிங்கிடம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, தனது பூர்வீகமான காஷ்மீர், இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டும் என விரும்பினார். இதனை கவுரவப் பிரச்சினையாகக் கருதினார்.

காஷ்மீரைத்தன்னுடன் இணைப்பதில் விருப்பம் காட்டிய பாகிஸ்தான் தனது இராணுவத்தை நிலைநிறுத்தியது. இந்தியாவின் உதவியை நாடினார் மன்னர் ஹரிசிங். இந்திய எல்லையிலிருந்து இந்திய இராணுவமும், பாகிஸ்தான் எல்லையிலிருந்து அந்நாட்டு இராணுவமும் காஷ்மீருக்குள் ஊடுருவின. காஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதியை பாகிஸ்தான் கைப்பற்றிக்கொண்டது. அது சுதந்திர காஷ்மீர் (Azad Kashmir) என்று பாகிஸ்தான் கூறுகிறது. அதனை ஆக்கிரமிப்பு காஷ்மீர் (Pakistan Occupied Kashmir-POK) என்று இந்தியா கூறுகிறது.

பாகிஸ்தான் கைப்பற்றிய பகுதி போக, எஞ்சிய மூன்றில் இரு பங்கு பகுதியை இந்திய இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. காஷ்மீர் மீதான உரிமைக்கு இருநாடுகளும் போட்டியிட்டன.

இந்த விவகாரம் 1948 இல் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றது. அய்.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 21.4.1948 அன்று தீர்மானம் (எண்.47) நிறைவேறியது. இதன்படி இருநாடுகளும் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். ஊடுருவிய பகுதியி லிருந்து இராணுவம் வெளியேற வேண்டும். ஆனால், இது நிறைவேறவில்லை.

இந்தியாவும் பாகிஸ்தானும் தனது செயலைச் சட்டப்பூர்வமானது என்று நிரூபிக்க இயலாததால், காஷ்மீர் மக்களிடம் ஓட்டெடுப்பு நடத்தி தீர்வு காண்பதாக அய்.நா. சபையில் ஒப்பந்தம் செய்யப் பட்டது. காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்புகிறார்களா? பாகிஸ்தானுடன் இணைய விரும்புகிறார்களா? அல்லது தனிநாடாகவே இருக்க வேண்டும் என விரும்புகிறார்களா? என்ற மூன்று கேள்விகள் அடிப்படையில் ஓட்டெடுப்பு நடத்த வேண்டும், ஓட்டெடுப்பின் மூலம் கிடைக்கும் மக்கள் கருத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் மன்னரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் அய்.நா. அவையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம்.

காஷ்மீர் இந்தியாவுடன் முழுமையாக இணைய வேண்டும் என்கிற நேருவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார் மாநில முதல்வரான (அப்போது அதற்கு பிரதமர் பதவி எனப் பெயர்) ஷேக் அப்துல்லா. அவருக்கு அய்.நா. சபையின் தலையீடு பிடிக்க வில்லை. பொது வாக்கெடுப்பிலும் ஆர்வமில்லை. நேரு தலைமையிலான இந்திய அரசாங்கமோ பொது வாக்கெடுப்புக்கு ஒப்புக் கொண்டிருந்தது. ஆனால், பாகிஸ்தான் தன்னுடைய இராணுவத்தை வெளியேற்றினால்தான் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுமென இந்தியா கூறியது.

நேருவுடன் ஷேக் அப்துல்லா நட்பு பாராட்டு வதாலும், இந்திய இராணுவம் நிலை கொண் டிருப்பதாலும் காஷ்மீர் மக்களால் சுதந்திரமாக வாக்களிக்க முடியாது என பாகிஸ்தான் கூறியது.

உலக நாடுகளின் தலையீட்டில் இருதரப்பு இராணுவத்தையும் வெளியேற்றலாம் என்றும் பாகிஸ்தான் தெரிவித்தது. காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை விரும்பவில்லை எனக் கூறி, பாகிஸ்தானின் யோசனையை நிராகரித்த இந்தியா, பொது வாக்கெடுப்பு என்கிற அய்.நா. ஒப்பந்தத்தையும் நிறைவேற்றாமல் கை கழுவியது.

அதே நேரத்தில் காஷ்மீரைத் தக்க வைத்துக் கொள்வதில் இந்தியா முழுமையாகக் கவனம் செலுத்தியது. அதன் விளைவுதான், காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்புத் தகுதி தரும் 370ஆவது அரசியல் சட்டப் பிரிவின் உருவாக்கம்.

இந்த சிறப்புத் தகுதியைப் பெறுவதன் மூலம் காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கலாம் என நினைத்தார் ஷேக் அப்துல்லா. பொது வாக்கெடுப்பைத் தவிர்க்க இது நல்ல வழி என நினைத்தது நேரு அரசாங்கம். இந்திய அரசியல் சாசனத்தின் 370ஆவது பிரிவு, ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு தற்காலிகமாக சிறப்புத்தகுதியை அளிக்கிறது. இந்த சிறப்புத் தகுதியின்படி இந்திய மாநிலங்களில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் மட்டுமே பெருமளவில் மாநில சுயாட்சியை கொண்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் மாநில ஆட்சிக் காலம் 6 ஆண்டுகளாகும். காஷ்மீர் மக்கள் தங்களுக்கு என்று சிறப்புச் சட்டங்கள் இயற்றி அதன் கீழ் வாழ்கிறார்கள். இதில் குடியுரிமை, சொத்துரிமை, அடிப்படை உரிமைகள் போன்றவை அடங்கும். இந்தச் சிறப்பு சட்ட பாதுகாப்பு காஷ்மீருக்கு மட்டுமல்லாமல், இமாசலபிரதேசம், அருணாசலபிரதேசம், அந்தமான் நிகோபர் தீவு, நாகாலாந்து உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கிற பழங்குடியினருக்கும் உண்டு.

சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், இந்திய பாராளுமன்றத்தில் இராணுவம், தகவல்தொடர்பு, வெளியுறவு விவகாரம் ஆகிய துறைகளைத் தவிர்த்து மற்ற துறைகளில் இயற்றப்படும் எந்தச்சட்டமும் ஜம்மு காஷ்மீர் சட்டசபையின் ஒப்புதல் இன்றி அம்மாநிலத்தில் செல்லாது.

பிரதமர் நேருவின் நம்பிக்கைக்குரியவரும் அவரது அமைச்சரவையில் இலாகா இல்லாத அமைச்சராக இருந்தவரும், காஷ்மீர் மகாராஜாவான ஹரிசிங்கின் முன்னாள் திவானுமான தமிழகத்தைச் சேர்ந்த கோபால்சாமி அய்யங்கார்தான் இச்சட்டப்பிரிவை வடிவமைப்பதில் முன்னின்றார். உள்துறை அமைச்சர் பட்டேலின் ஒத்துழைப்பையும் கோபால்சாமி அய்யங்கார் பெற்றார். இதன் காரணமாக, 370 ஆவது சட்டப் பிரிவு நிறைவேறியது. மேலும், இந்தியா வுக்குத் தனியாக அரசியல் சாசனம் இருப்பதுபோல் காஷ்மீருக்குத் தனியாக அரசியல் சாசனம் உருவாக்கிக் கொள்ள இந்திய அரசு ஒப்புக் கொண்டு, அதன்படி காஷ்மீருக்குத் தனி அரசியல் சாசனச் சட்டம் உருவாக்கப்பட்டு, 17.11.1956இல் நிறைவேற்றப் பட்டது. இது, 26.1.1957இல் இந்தியாவின் 8ஆவது குடியரசு நாளில் நடைமுறைக்கு வந்தது. காஷ்மீருக் கெனத் தனி தேசியக் கொடியும் அமைத்துக் கொள்ள சட்டம் அனுமதித்தது. அதன்படி, காஷ்மீர் தேசியக் கொடியும் உருவானது.

பொது வாக்கெடுப்பு நடத்தாமல் காஷ்மீரைத் தக்க வைத்துக்கொள்ள விரும்பிய இந்தியா, எக்காரணம்கொண்டும் காஷ்மீரை இழந்துவிடக் கூடாது என நினைத்ததால்தான் சிறப்புத் தகுதி வழங்கும் 370ஆவது பிரிவுக்கு வழி வகுத்தது.

1974ஆம் ஆண்டு போடப்பட்ட இந்திரா காந்தி-ஷேக் அப்துல்லா ஒப்பந்தத்திலும் (சிம்லா ஒப்பந்தம்) அரசியல் சாசனத்தின் 370ஆவது பிரிவின்படி ஜம்முகாஷ்மீரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், இதனை மாற்று வழிகளில் அடிக்கடி மீற முயற்சிப்பது இந்தியத் தரப்பின் வழக்கமாக இருக்கிறது.

பாதுகாப்பு என்ற பெயரில் அளவுக்கதிகமாக இராணுவத்தைக் குவிப்பது, மாநில அரசைக் கலைத்துவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமைப்பது, தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் இளைஞர்களை வேட்டையாடுவது, பெண்களை பாலியல் கொடுமைகளுக்குள்ளாக்கு வது என 370 ஆவது பிரிவுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகள் காஷ்மீரில் அதிகம். காஷ்மீர் மக்களுக்கு வழங்கிய உரிமைகளை அவ்வப்போது இந்திய அரசு பறித்தே வந்துள்ளது.

இது குறித்து எல்.கே.அத்வானி, தனது சுயசரிதை யில் இந்த அதிகாரப் பறிப்புகளை பெருமையுடன் இவ்வாறு குறிப்பிடுகிறார்: “ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் அனுமதிபெற்றுத்தான் எதையும் செய்ய வேண்டும் என்ற வெறுக்கக்கூடிய முறையை இந்திய அரசு நீக்கியது. அம்மாநிலத்தில் இந்திய குடியரசின் நிறுவனங்களுக்கு விதிக்கப் பட்டிருந்த பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

தேர்தல் ஆணையம், தலைமை தணிக்கை அதிகாரியின் அதிகாரம், காஷ்மீருக்கு விரிவாக்கப் பட்டது. அம்மாநில முதல்வரை ‘பிரதமர்’ என்று அமைக்கப்படும் முறை ஒழிக்கப்பட்டது” என்று எழுதியுள்ளார். சிறப்புத் தகுதியை வழங்கும் 370 ஆவது பிரிவினால்காஷ்மீர் மக்களுக்கு நேரடிப் பலன் தரும் அம்சங்கள் சில மட்டுமே. அவற்றில் முக்கியமானது, காஷ்மீரிகளைத் தவிர வேறு யாரும் அங்குள்ள நிலங்களை வாங்க முடியாது என்பதாகும்.

இதனால் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மலிவு விலையில் நிலத்தை தாரை வார்க்கும் புதிய பொருளாதாரக் கொள்கையின் முயற்சி அங்கு பலிக்கவில்லை. அதே நேரத்தில், காஷ்மீரில் நிரந்தரமாக வாழ்பவர்களுக்கே நிலம் உரிமை என்பதால், வெளி மாநிலத்தவரைத் திருமணம் செய்து கொள்ளும் காஷ்மீர் பெண்களுக்கு நிலம் தொடர்பான சொத்துகளில் உரிமை இல்லை என மறுக்கப்பட்டது.

எனினும், வெளி மாநிலப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் காஷ்மீர் ஆண்களுக்கு நிலமும் அதனைச் சார்ந்த சொத்துகளும் உரிமையுடையனவாக இருந்தன. இந்தப் பாலின பாகுபாட்டுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், 2002ஆம் ஆண்டில் ஜம்மு-காஷ்மீர் மாநில உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு வழங்கிய தீர்ப்பின் மூலம், வேறு மாநிலத்தைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்து கொண்டாலும், காஷ்மீர் பெண்களுக்கான சொத்துரிமை நீடிக்கும் என்பது உறுதி செய்யப்பட் டுள்ளது.

காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் ஏன் இந்த சிறப்புத் தகுதி என்று பொதுவாகக் கேட்கப்பட்டாலும், இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் சிலவற்றுக்கும் அந்தந்த மாநிலங்களின் தன்மைக்கேற்ப இதுபோல சிறப்புத் தகுதி அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சாசனத்தின் 371 ஆவது பிரிவின்படி மகாராஷ்டிராவின் விதர்பா, மரட்வாடா, குஜராத்தின் சவுராஷ்ட்ரா, கட்ச் ஆகிய பகுதிகளுக்கும் வளர்ச்சி நோக்கத்தின் அடிப்படையில் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. 371ஏ பிரிவு நாகலாந்திலுள்ள ஒரு மாவட்டத் திற்கும், 371ஜே பிரிவு ஐதராபாத்துக்கும் சிறப்புத் தகுதிகளை வழங்குகிறது.

நமது அரசியல் சாசனத்தின் தொடக்கத்திலேயே, “இந்தியா, அதாவது பாரதம் பல மாநிலங்களின் ஒன்றியம்” என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொழி, இனம், பண்பாடு, மக்களின் வாழ்க்கை முறை இவற்றின் அடிப்படையில் அவர்களின் உரிமைகள் காக்கப்பட சில சிறப்பு சட்டப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்துத்வா என்கிற நெ(வெ)றியைத் தவிர வேறெதுவும் இந்த மண்ணில் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தில் செயல்படும் பா.ஜ.க.வும், அதன் மூளையான ஆர்.எஸ்.எஸ்சும் காஷ்மீர் மாநிலத் திற்குத் தரப்பட்டுள்ள சிறப்புத் தகுதியை இப்போது நீக்கிவிட்டது. காஷ்மீரிகள் தனித்துவத்தை அழித்து இந்து பார்ப்பன இந்தியாவுக்குள் தனது மிருக பல மெஜாரிட்டியைப் பயன்படுத்தி இணைத்துக் கொண்டு விட்டது.

## ‘என்.அய்.ஏ.’ ஒழுங்கு முறை அமைப்புக்கு கூடுதல் அதிகாரமா? கண்டன ஆர்ப்பாட்டம்

தேசிய புலனாய்வு அமைப்புக்கு (என்.அய்.ஏ.) வரம்பற்ற அதிகாரம் வழங்கி, சிறுபான்மையினர், சமூக செயல்பாட்டாளர்களை ஒடுக்க நினைக்கும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஜூலை 27, 2019 மாலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ‘பாப்புலர் பிரன்ட் ஆப் இந்தியா’ ஒருங்கிணைத்த இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்று கண்டன உரையாற்றினார். “இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல, தமிழகத்தில் பார்ப்பன இந்துத்துவாவை எதிர்த்து களமாடும் சமூக இயக்கங்களை ஒடுக்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது” என்று பொதுச்செயலாளர் குறிப்பிட்டார்.

ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் துணைப் பொதுச் செயலாளர் மு. வீரபாண்டியன், திருமுருகன் காந்தி, மீ.த. பாண்டியன், இளந்தமிழகம் செந்தில், உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கண்டன உரையாற்றினர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வேத சாஸ்திரங்கள்படி மனிதர்கள் சமமாக முடியாதாம்

இந்த காலத்தில by birth-ன்றது எதையுமே சொல்லக் கூடாது மனுசன்ல எல்லாருமே சமம்னு ஒரு வார்த்த சொல் லிட்டு போயிட்ரா. உயர்ந்தவன் தாழ்ந்தவன்னு கெடையாது. அப்டின்னு சொன்னா அதை ஒப்புக் கொள்ள முடியாது. சாஸ்திரம் அதை அங்கீகரிக்கவில்லை. ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு characteristics உண்டு. அப்டின்ரதை சாஸ்திரம், வேதம் சொல்லுகிறது. இதை நான் வெளிப்படையா சொன்னா யாரும் ஒத்துக்க மாட்டின்ரா! நான் ஒரு உதாரணம் சொல்றேன் கேளுங்கோ, எனக்கு தெரியாது இது நான் கேள்விப்பட்ட ஒரு விசயத்த வெச்சிண்டு ஒரு விசயத்த சொல்றேன்! நாம் உபயோகப்படுத்துகிற எல்லா பொருட்களிலும் பிறப்பு குணாதிசயத்தை (birth characteristics) நாம எதிர்பாக்ரோம். அதற்கென்று ஒரு தனித்தன்மை உண்டு என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், நம்முடைய மனிதனில் மட்டும் தான் எல்லாரும் சமம்னு வெளிய வாயால சொல்லிட்டு போயிட்ரோம். இப்ப நான் கேட்கிறேன்? எல்லாரும் சமம், ஒருவனுக்கு பிறப்பொழுக்கம் என்பதே வேண்டியதில்லை. பிறப்பினாலே எல்லாரும் சமம்னு சொல்பவர்களிடம் நான் கேட்கும் கேள்வி என்ன வென்றால்? இப்போ வீட்டில் ஒரு நாய் இருக்கிறது. வளர்ப்பு நாய் வளர்க் கிறோம்ல, அது என்ன குணாதிசயங் களில் இருக்குனும்னா! எங்க வீட்ல வளர்ப்பதில்லை இருந்தாலும் சொல்ரேன். ஒரு பொமரேனியன் வளர்கிறான்னு வெச்சுக்கோங்க, இந்த நாயை மட்டும் ஏன் வளர்க்க வேண்டும்? இது தான் வளர்ப்பு நாயாய் இருக்க முடியும். ஏன் நாயிலேயே இன்னொரு ஜாதி இருக்கு. அல்சேசன்னு ஒரு ஜாதி இருக்கு. அதை ஏன் வீட்டில் வளர்க்கக் கூடாது என்று கேட்டால் அது வளர்ப்பு நாய் இல்லையென்று சொல்கிறார்கள். So within the characteristics of dogs, certain dogs are called pet animals, certain dogs called as wild animals. Within the characteristics நாய்களுக்குள்ளே இருக்குன்னு சொன்னா! மனிதர்களுக் குள்ளேயும் அந்த வித்தியாசம் இல்லைன்னு நாம் ஏன் சொல்லனும்னு கேட்கிறேன் நான்? மனிதர்களிலும்கூட எவன் உயர்ந்தவன், எவன் தாழ்ந்தவன் என்பதிலும் கூட குணாதிசயங்கள் பிறப்பிலேயே உருவாகிவிடுகிறது. அதை நாம் மறுக்க முடியாது.

**பார்ப்பன மாநாட்டில் வெறிப் பேச்சு**

அதிலேயும் இன்னொன்றை கேள்விப்பட்டேன். உண்டா என்பதை நீங்கள் தான் சொல்லனும். ‘திரிப்பூர சொத்த சுத்தி’ ன்னு வெச்சுருக்கா, பிராமணனா இருந்தா எப்டின்னா? மூன்று பரம்பரையாவது பிராமின் என்பது முக்கியமாக அவனுடைய அப்பா அம்மா வழியாக வந்துருக்கனும். அதாவது எப்படி என்றால், அப்பா அம்மா, அப்பா அம்மா, அப்பா அம்மா என்று மூன்று தலைமுறையாவது வந்துருக்கனும். அப்போது தான் அவனுக்கு “பிராமண”னுக்கான குணாதிசயங்கள் வந்திருக்குமென்று சாஸ்திரத்தில் சொல்லிருக்கு! இது ஆச்சரியமில்லை நான் கேள்விப்பட்டது, இந்த நாய்களை வாங்குபவர்கள்லாம், அந்த நாய்க்கு பெடிகிரி என்று வாங்குகிறார்கள். பெடிகிரின்னா (நாய்க்கான உணவு) என்ன? சொல்லுங்கள்? அது என்னாது கலப்பில்லாம ஒரிஜினலா இருக்கிறது தான் பெடிகிரி. அத தான் “பிராமிண”னுக்கும் இருக்கனும்னு நாங்க சொல்றோம். தப்பு என்ன அதில்? ஒன்றுமில்லை. குதிரைகள் அதாவது குதிரை பந்தயம் நடத்துகிறார்களே அதில், ஒருவர் சொன்னார், இந்த குதிரைப் பந்தயத்தில் ஒருத்தன் பணம் கட்டுகிறான். பணம் கட்டுறவன் என்ன பன்றான்னா? அந்த குதிரையின் breed என்னான்னு சோதனை பன்றான். அந்த breed எங்கிருந்து வந்ததுன்னு பாத்து அதுக்கு திரிப்பூர சொத்த சுத்தி பாக்றான். திரிப்பூர சொந்த சுத்தினா என்ன அர்த்தம்? அதுமூன்று தலைமுறையாக ஒரே இனத்தில் பிறந்த குதிரையா (Weather it is original horse are three generations from the same breed) அப்டியான்னு பாக்றா! அப்போது in all other things is a consider as breed is very very important. எடுத்துக்காட்டுக்கு, தமிழ்நாட்டுல அரிசி தான் முக்கியமானதுனா, அந்த அரிசிக்கு குறிப்பிட்ட அது நெல்லூர் அரிசியா? சம்பாவா? என்னான்னு அதோட breed முக்கியமாக பார்க்கிறோம். பழம் வாங்குவதாக இருந்தால்கூட கலப்பினம் இலலாததது தானான்னு முக்கியமா பார்க்குறோம். முக்கியமாக இன்னொன்று சொல்கிறேன் . யாரும் தப்பா நெனச்சுக்கக்கூடாது. இந்த காலத்துல, தமிழ்நாட்டில மத்த இடங்களில்லாம் கூட போராட்டங்கள் நடக்குது. என்ன போராட்டம்னா? மரபணு மாற்றத்தைக் கொண்டு வரக்கூடாது, அதை கொண்டு வந்தால் நம்ம ஊரு விவசாயமே அழிந்து போய்விடும் என்று கூறி, மரபணு மாற்றப்பட்ட விதைகள் எதையுமே உபயோகப்படுத்தக்கூடாதென்று கூறுகிறார்கள். நான் அதையே தான் மனிதர்களுக்கும் சொல்றேன். நீங்க உபயோகப்படுத்துகிற பழம்,விதை, தானியங்களில் கலப்பு இருக்கக் கூடாது, அரிசியில் இருக்கக் கூடாது, மிருகங்களில் இருக்கக் கூடாது ஆனா உங்கள்ல (மனிதர்களில்) மட்டும் கலப்பு இருக்கலாம்னு நீங்க எப்படி எதிர்பார்க்கிறீங்க? அது தப்பு இல்லையா?

**– தஞ்சை சாஸ்திரா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் வெங்கடகிருஷ்ணன் என்ற பார்ப்பனர், புரோகிதர் கோலத்துடன கேரள மாநிலம் கொச்சியில் நடந்த உலகத் தமிழ் பிராணர் மாநாட்டில் பேசியது**

**குறிப்பு : பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் மேற்குறிப்பிட்ட இனவெறிப் பேச்சுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி, சென்னை மாநகர காவல் ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டது. கழக சார்பில் இரா. உமாபதி, பிரவின் குமார் (மே 17), நாகை திருவள்ளுவன் (தமிழ்ப் புலிகள் கட்சி), மணிகண்டன் (த.வி.க.), ச. குமரன் (த.பெ.தி.க.) ஆகியோர் மனுவை அளித்தனர்.**

# கல்விக் கொள்கை ஆபத்துகளை விளக்கி மாணவர்களிடம் கழகம் துண்டறிக்கை

“புதிய தேசிய கல்விக் கொள்கை என்கிற பெயரில் மீண்டும் குலக் கல்வி” என்கிற தலைப்புடன் மத்திய பாஜக வின் புதிய கல்விக் கொள்கையின் ஆபத்தை மாணவர்களுக்கு புரியும் வகையில், தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் சேலம் மற்றும் சென்னையில் துண்டறிக்கைகள் கல்லூரி மாணவர்களிடையே தமிழ்நாடு மாணவர் கழக தோழர்களால் வழங்கப்பட்டது. 29.07.2019 அன்று சென்னையில், இராணி மேரி, விவேகானந்தா ஆகிய கல்லூரிகளில் மாணவர் கழகத் தோழர்கள் அருண், பிரவீன், தமிழ்தாசன், யுவராஜ், வெங்கடேஷ் ஆகியோர் துண்டறிக்கைகளை வழங்கினர். யுவராஜ் நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் பகுதி மாணவர் கழகத் தோழர்கள், ஜுலை 30, 31 மற்றும் ஆகஸ்ட் 1 ஆகிய மூன்று நாட்கள் கல்லூரி மாணவர்களிடையே துண்டறிக்கைகளை வழங்கினர். முதல் நாள் 30.07.2019 அன்று, மேட்டூர் அரசு கலைக் கல்லூரி முன்பும், பேருந்து நிலையம் முன்பும் வழங்கப்பட்டது. இரண்டாவது நாளான 31.07.2019, நங்கவள்ளி பேருந்து நிலையம், அரசு தொழில்நுட்பக் கல்லூரியிலும் வழங்கப்பட்டது. மூன்றாவது நாளாக 1.08.2019 அன்று, தி காவேரி கல்லூரி முன்பும் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டது. சந்தோஷ், திவாகர், பிரபாகரன், கிருஷ்ணன், இராசேந்திரன், கண்ணன், செந்தில், மனோஜ்குமார், உமாசங்கர், சந்திர சேகர், ஆர்.எஸ்.சந்திரன், நாகராஜ், ஜெகதீஸ், இராமச்சந்திரன் ஆகியோர் துண்டறிக்கைகளை வழங்கினர். காவலாண்டியூர் சந்தோஷ் நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

## காமராசர் பிறந்த நாள்: மேட்டுபாளையத்தில் கழகம் ஒரு நாள் பரப்புரை

திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் காமராசர் பிறந்த நாளை முன்னிட்டு கடந்த 14,15,16 தேதிகளில் திருப்பூர், பல்லடம், மடத்துக்குளம் பகுதிகளில் நடந்த தெருமுனை கூட்டங்களின் நிறைவு நிகழ்வாக கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் பரப்புரை இயக்கங்கள் நடைபெற்றது. 28 .07.2019 அன்று காலை எல்லம்மாள் தங்கும் விடுதி அருகில் நடந்த பரப்புரை நிகழ்விற்கு, மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் தலைமை ஏற்று நிகழ்வை தொடங்கி வைத்தார். தொடர்ந்து தோழர்கள் முகில் ராசு மற்றும் யாழ் வெள்ளியங்கிரி ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்விற்கு அமுல்ராஜ் நன்றி கூறினார். மதியம் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் வீட்டில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

மாலையில் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் நடந்த பரப்புரை கூட்டத்திற்கு இராமசந்திரன் தலைமை தாங்கினார். திராவிடர் கழக மாவட்டத் தலைவர் வேலுச்சாமி உரையாற்றினார். மடத்துக்குளம் மோகன், பொருளாளர் துரைசாமி மற்றும் யாழ் வெள்ளியங்கிரி சிறப்புரையாற்றினர். விஷ்ணுபிரசாத் நன்றியுரையாற்றினார். மாலை நிகழ்வில் திராவிடர் கழகத்தைச் சார்ந்த, சாலை வேம்பு சுப்பையன், தேவராஜ் ஆகியோர் பங்கேற்றனர். இரு நிகழ்விலும் பெரியார் பிஞ்சு யாழினி, யாழிசை காமராஜர் பகுத்தறிவு பாடல்கள் பாடினர்.

நிகழ்வில் தோழர்கள் சங்கீதா, சரஸ்வதி, சங்கவி, ராஜாமணி, ராமசந்திரன், அமுல்ராஜ், விஷ்ணுபிரசாத், துரைசாமி, மோகன், சிவானந்தம், வெள்ளியங்கிரி, கிருஷ்ணன், முகில் ராசு, விஜயகுமார், தனபால், அய்யப்பன், முத்து, ராசசிங்கம், மூர்த்தி மற்றும் குழந்தைகள் யாழினி, யாழிசை, பரிதி ஆகியோர் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

## கழகக் கட்டமைப்பு நிதி

(நயினார் பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம்)

| | | |
|---|---|---|
| பா. சின்னமணி (பகுத்தறிவாளர்) | ரூ. | 2,000.00 |
| க. மதியழகன் | ரூ. | 2,000.00 |
| க. இராமசாமி, செம்பாக்குறிச்சி | ரூ. | 2,000.00 |
| நாகராசன் | ரூ. | 1,000.00 |
| இராமச்சந்திரன், கீழ்க்குப்பம் | ரூ. | 1,000.00 |
| புலவர் கு. அண்டிரன் | ரூ. | 500.00 |
| கா. அசன் | ரூ. | 500.00 |
| ரமேசு (மளிகை) | ரூ. | 500.00 |
| அங்கமுத்து ஆசிரியர் | ரூ. | 500.00 |
| இரா. சரவணன் | ரூ. | 500.00 |
| சு. குழந்தைவேல் | ரூ. | 500.00 |
| தேனப்பன் (இரவி) | ரூ. | 500.00 |
| சி. நெடுஞ்செழியன் | ரூ. | 500.00 |
| மைக்கேல் அலம்பளம் | ரூ. | 250.00 |
| தண்டபாணி | ரூ. | 100.00 |
| **கருங்குழி தோழர் வெற்றிவேல் வழியாக** | | |
| ந. வெற்றிவேல் | ரூ. | 2,600.00 |
| ந. அய்யம்பெருமாள் | ரூ. | 2,500.00 |
| சி. ஆசைத்தம்பி, கல்லக்குறிச்சி | ரூ. | 2,000.00 |
| மு. அல்லிமுத்து | ரூ. | 1,000.00 |
| த. செந்தில்குமார், நகைக்கடை | ரூ. | 1,000.00 |
| தகடூர் சம்பத் | ரூ. | 1,000.00 |
| வி. திருமால் | ரூ. | 500.00 |
| புலவர் சிலம்பூர்கிழான் | ரூ. | 500.00 |
| சி. முத்துவேல், மேலூர் | ரூ. | 500.00 |
| ந. தமிழவன் | ரூ. | 300.00 |
| க. இராசவேல் | ரூ. | 200.00 |
| பி. பிரகாசு | ரூ. | 200.00 |
| த. அய்யப்பன், அம்மகளத்தூர் | ரூ. | 200.00 |

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th August 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN